Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p382–390 TIRJTS-2026-0029
DOI: 10.63300/tmi12n062026.18

RESEARCH ARTICLE

கானகன் நாவலில் பளியர் இன மக்களின் வாழ்வியல் முறைகள்

Lifestyles of the Paliyar Indigenous People in the Novel Kaanagan

Kowsalya S[1,*], Dr. Nalini V[2]

[1] Research scholar, Department of Language Culture and Society, School Of Humanities, Faculty of Liberal Arts And Business Studies, SRM Institute OF Science And Technology, Ramapuram , Chennai-89

[2] Assistant professor – Tamil, Department of Language Culture and Society, School OF Humanities, Faculty of Liberal Arts And Business Studies, SRM Institute OF Science And Technology, Ramapuram , Chennai-89

***Corresponding author:** Kowsalya S, ks3875@srmist.edu.in

ARTICLE INFO

Article history
Received: 11 October 2026
Revised: 22 October 2026
Accepted: 25 October 2026

Article ID
TIRJTS-2026-0029

Peer review
Double-blind peer review

Keywords
Kaanagan novel
Paliyar indigenous people
Tamil literature
marginalized communities
tribal life
forest rights
indigenous culture
ecological relationship

ABSTRACT

This paper explores the socioeconomic, cultural, and ecological dimensions of the Paliyar indigenous community as depicted in Lakshminarayanan Saravanakumar's Tamil novel Kaanagan. Moving beyond narrow theoretical boundaries, the study examines how the novel portrays the intricate relationship between the Paliyar people and their natural environment, highlighting their daily struggles, traditional practices, rituals, gender roles, economic systems, and confrontations with external structures of power and land rights.

How to cite this article: Kowsalya S, & Dr. Nalini V (2026). **கானகன் நாவலில் பளியர் இன மக்களின் வாழ்வியல் முறைகள்**. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 382–392. https://doi.org/10.63300/tmi12n062026.18
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

சே.கௌசல்யா

முனைவர் பட்ட ஆய்வாளர், மொழி, பண்பாடு மற்றும் சமுதாயம் - துறை

பன்முகக் கலை மற்றும் வணிகக் கல்விப் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம் இராமாபுரம் சென்னை -89, மின்னஞ்சல்

ks3875@srmist.edu.in,

முனைவர் வெ. நளினி

(உதவிப் பேராசிரியர்-தமிழ்), மொழி, பண்பாடு மற்றும் சமுதாயம் – துறை, பன்முகக் கலை மற்றும் வணிகக் கல்விப் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம் இராமாபுரம் சென்னை -89, மின்னஞ்சல் nalinik.shankar@gmail.com

முன்னுரை

சமகாலத் தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை, அவர்களின் சமூக அடையாளம், வாழ்வாதாரப் போராட்டம், இயற்கையுடனான உறவு ஆகியவை தொடர்ந்து கவனத்திற்கு வருகின்றன. குறிப்பாகப் பழங்குடி மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தும் படைப்புகள், அவர்களின் அன்றாட வாழ்வை மட்டும் காட்டாமல், அவர்கள் எதிர்கொள்ளும் அதிகாரச் சிக்கல்கள், நிலம் மற்றும் காடு மீதான உரிமை, பண்பாட்டு அடையாளம், நம்பிக்கைகள், வழக்காறுகள் ஆகியவற்றையும் பதிவு செய்கின்றன. இந்தப் பின்னணியில் லக்ஷ்மி சரவணக்குமாரின் 'கானகன்' நாவல் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது.

நாவல் பளியர் இன மக்களின் வாழ்வை கதைப்போக்கின் மையத்தோடு இணைக்கிறது. ஆசிரியரின் முன்னுரைக் குறிப்புப்படி, பளியர் மக்களுடனான சந்திப்புகள் மற்றும் தகவல் சேகரிப்புகள் நாவலின் சமூகப் பதிவுகளுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. இக்கட்டுரையின் நோக்கம் நாவலை ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டுக்குள் மட்டும் அடைத்துவிடுவது அல்ல; மாறாக பளியர் மக்களின் வாழ்வியல் எவ்வாறு காடு, பாத்திரம், விலங்கு, சடங்கு, பெண் வாழ்க்கை, பொருளாதாரம், அதிகாரம், உரிமை ஆகிய பல அடுக்குகளில் வெளிப்படுகிறது என்பதை ஒருங்கிணைத்து ஆராய்வதாகும்.

ஆசிரியரும் நூலும்

மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்தவர். கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக சென்னைவாசி. சிறுகதைகள் நாவல்கள் கவிதைகள் என வெவ்வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர். சாகித்ய அகதெமியின் யுவபுரஸ்கார் விருது, சிறந்த நாவலுக்கான சுஜாதா விருது. ஆனந்த விகடன் விருது, இலக்கிய சிந்தனை விருது, பா.சிங்காரம் நினைவு விருது என ஏராளமான விருதுகள் இவரது வெவ்வேறு படைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு இடங்களுக்கு சென்று வருவதை பிரதான வேலையாகக் கொண்ட இவர் சில திரைப்படங்களின் திரைக்கதையாசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் இயக்கிய மயானத் தங்கம் என்னும் குறும்படம் நைரோபியில் நடந்த ஸ்லம் ஃபிலிம் பெஸ்டிவலில் சிறப்பான கவனத்தை பெற்றதோடு லண்டன் திரைப்பட விழாவிலும்

கவனம் பெற்றது. தனது முதல் படம் இயக்குவதற்கான வேலைகளில் தற்போது மும்முரமாக உள்ளார்.

கானகன் நாவலை எழுதிய லக்ஷ்மி சரவணக்குமார் நீலநதி,யாக்கை, வசுந்தரா என்னும் நீலவர்ணப் பறவை,மச்சம்,மயான காண்டம், மஹ்ராஜின் மைதானம்,யானை (தேர்ந்தெடுத்தக் கதைகள்),லக்ஷ்மி சரவணகுமார் கதைகள் (2007-2017),நாவல்கள்,உப்பு நாய்கள்,கானகன்,நீலப்படம்,கொமோரா,கவிதைகள்,மோக்லியைத் தொலைத்த சிறுத்தை,கட்டுரைகள்,தை எழுச்சி சில சாட்சியங்கள் (தொகுப்பாசிரியர்) சொற்களைத் தவிர வேறு துணையில்லை சிறுகதை கவிதை கட்டுரை நாவல் என பன்முகத்தன்மையில் எழுதும் எழுத்தாளராவார். மிகச் சமீபத்தில் வெளிவந்த லக்ஷ்மி சரவணக்குமாரின் நாவல் கதைப்போக்கில் பளியர் என்னும் இனத்தைப் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளது. அந்நாவலின் முன்னுரையில் பளியர் இன மக்களுடனான சந்திப்புகள் மற்றும் தகவல் சேகரிப்புகள் மூலமே பளியர் சமூகம் பற்றிய விவரணைகளைப் பதிவு செய்திருப்பதாக நாவலாசிரியர் குறிப்பிடுகிறார்.

பாத்திரப் படைப்பும் புனைவு அழகியதும்

கானகன் நாவலில் பாத்திரங்களின் உருவாக்கம் மனிதர்களை மையமாகக் கொண்டதாக மட்டும் அமையாமல், அவர்கள் வாழும் இயற்கைச் சூழலுக்கும் ஒரு தனித்துவமான உயிர்ப்பை வழங்குவதாக அமைந்துள்ளது. குறிப்பாகத் தங்கப்பன் (கருமாண்டி) என்ற பாத்திரத்தின் வழியாகக் காட்டைப் பார்க்கும் பார்வை இயற்கையோடு அவனுக்குள்ள நெருக்கத்தை உணர்த்துகிறது. காட்டை வெறும் மரங்கள் நிறைந்த இடமாகக் கருதாமல், அதற்கும் மனித உடலைப் போன்ற உறுப்புகளும் உயிரும் இருப்பதாகக் காடன் எண்ணுகிறான். இதனை "எல்லாக் காட்டுக்கும் ஒரு ஒடம்பு இருக்கு, மனுஷ ஒடம்புக்கு இருக்கிற எல்லா உறுப்பையும் மாதிரி அதுக்கும் உடலுறுப்பு இருக்கு... மனுஷனுக்குனு ஆகாரமா ஒரு உசுரு இருக்கிற மாதிரி அதுக்கும் ஒரு உசுரு இருக்கு..." (பா எண் 17-24) என்ற கூற்று வெளிப்படுத்துகிறது. இக்கருத்து மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஆழமான உறவை எடுத்துக்காட்டுகிறது. மேலும், காட்டிற்குள் செல்லும்போது கவனத்துடன் நடக்க வேண்டும் என்பதை "காட்டுக்குள்ள காலு வெச்சு நடக்கறப்போ எல்லாம் யாரோ ஒருத்தரோட ஒடம்புல காலு வெச்சு நடக்கறோம்கற கவனத்தோட நட..." என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் காடன் இயற்கையை வெறுமனே பயன்படுத்த வேண்டிய ஒன்றாகப் பார்க்காமல், மதித்து அணுக வேண்டிய உயிர்ப்புடைய ஒன்றாகக் கருதுகிறான் என்பது புலப்படுகிறது. அதேபோல், "காடு சிலசமயம் தேவதை... சிலசமயம் மோகினி, சிலசமயம் பிசாசு... எப்ப என்னவா இருக்கும்னு தெரியாது..." என்ற வரிகள் காட்டின் பல்வேறு இயல்புகளை மனித உருவகங்களின் வழியாக

வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு காடு ஒரு பின்னணியாக மட்டுமின்றி, கதையின் நிகழ்வுகளோடும் பாத்திரங்களின் உணர்வுகளோடும் இணைந்து செயல்படும் முக்கியப் புனைவுக் கூறாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, கானகன் நாவலில் பாத்திரப்படைப்பும் புனைவு அழகியலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான உறவை இயல்பான கதைசொல்லல் முறையில் வெளிப்படுத்துகின்றன.

காடும் குடியிருப்பும்

நாவலின் கதைநிலம் காடு சார்ந்தது. பளியக்குடி என்பது வெறும் வசிப்பிடம் அல்லாமல், சமூக உறவுகள் உருவாகும் இடமாகவும், பாதுகாப்பு மற்றும் அச்சம் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் வழங்கும் இடமாகவும் அமைகிறது. அதனைச் சுற்றிய மலைப்பகுதிகளுடன் தொடர்புடைய பளியக்குடிகள் பற்றிய குறிப்புகள் நாவலின் பரந்த புவியியல் சூழலை உருவாக்குகின்றன. இங்கு காடு ஒரு இயற்கைப் பின்னணி மட்டுமல்ல; பாத்திரங்களின் வாழ்வை நிர்ணயிக்கும் சக்தியாகவும் அமைகிறது. "இந்தக் காட்டிற்குத் தான் எத்தனை பெரிய மனது? தன்னை நம்பியிருக்கும் யாருக்கும் குறை வைக்காது பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. இன்று நேற்றல்ல... பல நூறு வருஷங்களாய்'.... தங்கப்பன் தனக்கு முன்னாலும் எத்தனை ஆயிரம் பேர் இந்தக் காட்டுக்குள் வேட்டையாடி யிருப்பார்கள் என்று யோசித்துப் பார்த்தான்." (ப.எண் -20-21)

வேட்டை வாழ்வியல்

வேட்டை 'கானகன்' நாவலின் முக்கியமான வாழ்வியல் மற்றும் கதை இயக்கக் கூறாகும். தங்கப்பனின் வேட்டைச் செயல்பாடு ஒரு தனிமனிதனின் தொழில் அல்லது விருப்பம் மட்டுமல்லாமல், மனிதன்–விலங்கு உறவைப் பற்றிய அறநெறிக் கேள்வியையும் எழுப்புகிறது. மறுபுறம் வாசியின் அனுபவ உலகில் காடு மற்றும் விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டிய வாழ்வியல் உலகாகத் தோன்றுகின்றன. இதன் மூலம் வேட்டை அறிவு, வனச் சூழலை வாசிக்கும் திறன், விலங்குகளின் இயல்பைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவை பளியர் வாழ்வியலின் முக்கிய கூறுகளாக வெளிப்படுகின்றன. "நீ வேட்டையாடறது ஒரு மிருகம் அவ்வளவுதான். நீ வேட்டையாட இந்தக் காடு ஆயிரம் மிருகங்களக் கொடுக்கும். எல்லாத்துகிட்டயும் கருணைகாட்டிட்டு இரு/க்கக் கூடாது. நீ வாழ்றதுக்குச் செய்றதுதான் வேட்ட, இது கொலை இல்ல..." (ப எண்-55)

குடும்பம் மற்றும் சமூக உறவுகள்

பளியர் சமூகத்தின் குடும்ப அமைப்பு பெண் வழிச் சமூகமாக இருந்ததற்கு நாவலில் எடுத்துக்காட்டுகள் காணப்படுகிறது இக்கருத்து பழங்குடிகள் குறித்த புத்தகங்களிலும்

பதிவாகியுள்ளதை நாவல் சுட்டிக்காட்டுகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது. மற்றும் திருமண நடைமுறைகள் நாவலின் சமூகப் பதிவுகளில் ஒரு பகுதியாகின்றன. பளியர் திருமணம் பெரிய அளவிலான சடங்கு நிகழ்வுகளின்றி எளிமையாக நடைபெறும் வழக்கம் நாவலில் பதிவு செய்கிறது. பளியக்குடி சமூக அமைப்பு மிக பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடியதாக உள்ளது இதன் மூலம் அறிய முடிகிறது ."பழைய குடி பொம்பளைகள் தான் இந்த காட்டின் பலம்,ஜீவன்."(ப-31) .இதன் மூலம் சமூக உறவுகள் ஆடம்பரச் சடங்குகளை விட உறவினரின் பங்கேற்பு, சமூக ஒப்புதல், குடும்ப இணைவு போன்ற அடிப்படைகளில் அமைகின்றன என்பதைப் பார்க்க முடிகிறது. ஆனைமலையில் உள்ள முதுவர்கள் மற்ற பழங்குடி மக்கள், தென் மாவட்டங்களில் உள்ள காணிக்காரர், நீலகிரி மலையில் உள்ள முள்ளு குறும்பர் சமூகங்கள் குறித்த இன வரைவியல் பதிவுகளில் மரபார்ந்த சொத்துரிமைகளும் பதவிகளும் பெண்வழியாகவே அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படுவதாக கூறப்படுகிறது. (ப.எண் -96.)

5.6 பெண்களின் நிலையும் பிரசவ வழக்கமும்

‘கானகன்’ நாவலில் பளியர் பெண்களின் உடல், பிரசவம் மற்றும் சமூக வாழ்க்கை தொடர்பான சில தனித்துவமான வழக்காறுகள் பதிவு செய்யப்படுகின்றன. பளியக்குடிப் பெண்கள் பிறர் உதவியின்றித் தாமே பிரசவத்தை எதிர்கொள்வதும், பிரசவத்திற்கு முன்பும் பின்பும் குறிப்பிட்ட காலம் தனிமையைப் பேணுவதும் சுட்டப்படுகிறது. “தன் குழந்தையை பிரசிவிக்கும் பளிச்சி அவளாகவேதான் பிரசவம் பார்த்துக்கொள்ள வேண்டும், மூன்று நாட்களுக்கு யாரும் அவளையும் அவள் பிள்ளையையும் தொட மாட்டார்கள். (ப எண் -67)”இருப்பினும் நாவலில் காணப்படும் ஒரு வழக்கத்தை முழுப் பளியர் சமூகத்திற்கும் பொதுவானதாக நேரடியாக முடிவு செய்யாமல், நாவலின் குறிப்பிட்ட சமூகச் சூழலில் பதிவு செய்யப்பட்ட பண்பாட்டுக் கூறாக உள்ளது .

சடங்குகள் - நம்பிக்கைகள்

பளியர் மக்களின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தும் முக்கிய கூறுகளில் சடங்குகளும் நம்பிக்கைகளும் அடங்குகின்றன. பளிச்சி குறி சொல்லுதல், புலி வழிபாடு, பளிச்சி வழிபாடு போன்ற வழக்காறுகள் நாவலில் இடம்பெறுகின்றன. பட்டாம்பூச்சி துர்சகுனத்தின் குறியீடு என நாவல் குறிப்பிடுகிறது. இத்தகைய நம்பிக்கைகளை வெறும் மூடநம்பிக்கைகள் என்று குறைத்து மதிப்பிடாமல், பொம்பளைகள் உப்பையும், காய்ந்த வத்தலையும் எடுத்துக் கொண்டு வந்து ஊரைச் சுற்றி வந்தனர். குளிருக்கு பெருசுகள் தீ மூட்டம் போட்டிருந்தனர். ஊரைச் சுற்றி வந்து கழிப்பு கழித்ததைத் அவர்கள் அந்தத் தீயில் தூக்கிப்போட அவர்களை எதிர்நோக்கியிருக்கும் பீடைகளின் உக்கிரம் அதில் வெடித்து எரிந்தது. (ப-65) ஒரு

சமூகத்தின் இயற்கை அனுபவங்களிலிருந்து உருவான பண்பாட்டு அறிவு மற்றும் குறியீட்டு அமைப்பாக வாசிப்பது இவ்வாய்விற்கு பொருத்தமானதாகும்.

பளிச்சி வழிபாடு

குடியில் மாலை நேரம் இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது வேம்புவின் மனைவி ஆங்காரத்துடன் அலறும் சத்தம் கேட்டது அவள் முகம் சிவந்து ருத்ரதாண்டவம் ஆடிக்கொண்டிருந்தால் குறி சொல்லும் வழக்கம் பளியர் குடியிலும் உள்ளது என்பதை நாவல் மூலம் அறிய முடிகிறது. "அவள் முகம் சிவந்து தலைவிரி கோலமாய் ருத்ரதாண்டவமாடிக் கொண்டிருந்தாலள். கண்களில் எல்லோரையும் எரித்து விடும் உக்கிரம். எத்தனையோ மாதத்திற்கு பின்னால் பளிச்சி இறங்கியிருக்கிறாள். முன்னேற்போதையும் விட இந்த முறை உக்கிரம் அதிகம் பளிச்சியாத்தாளின் வாக்கை கேட்க எல்லோரும் பொறுமையோடு காத்திருந்தனர்". (ப-63).

முதலாளித்துவச் சுரண்டலும் அதிகார உறவுகளும்

காடு மற்றும் அதன் வளங்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்கள், அதைக் காட்டை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களைத் தாழ்த்திப் பார்க்கும் நிலை உருவாகும்போது சமூக அநீதி தீவிரமடைகிறது. 'அதிகாரம் யாரிடம் உள்ளது?', 'வளங்களின் உரிமை யாருக்கு?', 'வனத்தின் மீது யாருடைய குரல் செல்லுபடியாகிறது?' போன்ற கேள்விகள் எழுகின்றன. பழங்குடி மக்களைக் கொடூரமான சுரண்டும் சட்டங்களும், திட்டங்களும் ஆங்கிலேயர் ஆட்சியின்போது தொடங்கிவிட்டது. பழங்குடிகளின் ஒளிவிளக்கு (ப-33)

யானைகளின் நிலைமாற்றம்

நாவலில் புலியும் யானையும் முக்கியமான வன உயிரினங்களாகத் தோன்றுகின்றன. யானைகளின் நிலைமாற்றம், வேட்டை, வன அழிவு ஆகியவை மனிதச் செயல்பாடுகளால் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் காட்டுகின்றன. யானைகள் பெரும் எண்ணிக்கையில் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருப்பது ஊர்க்காரர்களுக்குத் தெரிந்தது. மழையில் பெரும் உருவங்கள் காட்டையே அதிரச் செய்தபடி சிந்திய ரத்தத்திற்கு பதில் தேடி அலைந்து கொண்டிருந்தன.(ப-219). புலி வேட்டையை மையமாகக் கொண்டு தொடங்கி, புலியின் வேட்டையை மையப்படுத்தி முடியும் அமைப்பு நாவலின் விலங்கு–மனித உறவை வலுப்படுத்துகிறது. பாட்டா நீ நெனைக்கிற மாதிரி எதுவும் இல்ல... இம்புட்டு தூரம் வந்த யானைக ஏன் குடிக்குள்ள வரல... அதுக நோக்கம் நம்மள அழிக்கிறது இல்ல... எச்சரிக்கிறதுதான்... அதுகளுக்கு யாரெல்லாம் சதி செஞ்சாங்களோ அதுக்கெல்லாம் வஞ்சம் தீக்குது. தீத்துக்கட்டுமே..." புலியின் இயல்பு மற்றும் இயற்கை அறிவு தொடர்பான பகுதிகள், விலங்குகளுக்கும் இயற்கை ஒழுங்கு உண்டு என்ற கருத்தை விவாதிக்க வழிவகுக்கின்றன.

காடு அழிப்பும் வாழ்வாதார நெருக்கடியும்

காடு அழிப்பு 'கானகன்' நாவலின் முக்கியச் சூழலியல் பிரச்சினையாக அமைகிறது. காடு, நிலம், மனித வாழ்வாதாரம் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை நாவல் சுட்டுகிறது. "கஞ்சாக்காட்டிற்குத் தாங்கள் வேலைக்கு போனதின் வழி தங்களின் சில வாழ்வாதராத் தேவைகள் நிறைவேறியது என்னவோ உண்மைதான், ஆனால் அவர்கள் செய்தது மன்னிக்க முடியாத துரோகம்".(ப-234) காடு அழிவிற்கு மனிதச் செயல்பாடுகளே முக்கிய காரணமாக அமையும் நிலையில், அதன் விளைவுகளை முதலில் அனுபவிப்பவர்களில் பளியர் மக்களும் அடங்குகின்றனர். இதனால் அவர்களின் வாழ்வாதார நெருக்கடி தனிப்பட்ட பொருளாதாரப் பிரச்சினையாக இல்லாமல், காடு அழிப்பு மற்றும் வளங்களின் அநியாயப் பயன்பாட்டுடன் இணைந்த சமூக–சூழலியல் பிரச்சினையாக வெளிப்படுகிறது.

உரிமைக்கான போராட்டமும் சமூக விழிப்புணர்வும்

பளியர் மக்களின் உரிமைக்கான போராட்டம் நாவலின் முக்கியமான சமூகப் பரிமாணமாகிறது. ஒரு சமூகத்தின் உரிமை என்பது வெறும் நில உரிமை மட்டுமல்ல; வாழ்விடம், காடு, இயற்கை வளங்கள், பண்பாட்டு வழக்காறுகள், தலைமுறை அறிவு, சமூக மரியாதை ஆகியவற்றின் மீதான உரிமையையும் உள்ளடக்கியது. எந்த மேலிடத்த ஸார் பாத்தாங்க... இங்க இருக்க எல்லா மேலிடத்துக்கும் சொல்லிட்டா கேரளாவுக்கு மரம் கடத்தறாய்ங்.. அந்தப் பக்கத்துல இருந்து சாராயம் கொண்டு வர்றாய்ங்.. தெனமுந்தான் காட்டுக்குள்ள வேட்டைக்கு ஆளுக போறாய்ங்க... அவய்ங்கள் எல்லாம் பிடிக்கிறீங்களா என்ன?..." (ப-183) பளியர் மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பது என்பது அவர்களை காட்டிலிருந்து பிரிப்பது அல்ல; அவர்களின் வாழ்வியல் அறிவையும் பண்பாட்டு அடையாளத்தையும் மதிப்பதுடன் இயற்கைப் பாதுகாப்பை இணைப்பதாக இருக்க வேண்டும். **மனித மனமும் உளவியல் பரிமாணமும்**

காடு மற்றும் வேட்டை சார்ந்த வெளிப்புறச் சம்பவங்களுக்குள் மனிதனின் பயம், ஆசை, அதிகார விருப்பம், குற்ற உணர்வு, பாதுகாப்பு உணர்வு போன்ற உளவியல் நிலைகளும் இயங்குகின்றன. ஒருவேளை அதிகம் பாதிக்கப்படப் போவது பளியக்குடிதான். பேருக்கு ஃபாரஸ்ட்காரர்கள் கேஸைப் போட்டு ஆள் கணக்குக் காட்ட பளியன்களைத்தான் தூக்கிச் செல்வார்கள்.(ப-159) மனிதன்

இயற்கையை வெல்வதற்கான பொருளாகக் காணும் மனநிலைக்கும், இயற்கையோடு இணைந்து வாழும் மனநிலைக்கும் இடையிலான மோதல் நாவலின் முக்கிய உளவியல் மற்றும் சமூகப் பரிமாணமாக அமைகிறது. இங்கே தங்கப்பன் என்கிற

தனிமனிதன் யாருக்கும் முக்கியமில்லை. தேவை ஏற்படும் போது அவன் ஒரு தற்காலிக நிவாரணி அவ்வளவுதான்.(ப-186).

முடிவுரை

லக்ஷ்மி சரவணக்குமாரின் 'கானகன்' நாவல் பளியர் இன மக்களின் வாழ்க்கையை வெறும் பின்புலமாகப் பயன்படுத்தாமல், காடு, விலங்கு, மனிதன், அதிகாரம், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றின் பரஸ்பர உறவுகளோடு இணைத்து முன்னிறுத்துகிறது. பளியர் மக்களின் வாழ்வியல் காடு சார்ந்த அறிவு, வேட்டை அனுபவம், உணவு, குடும்ப உறவுகள், பிரசவம், சடங்கு, நம்பிக்கை போன்ற பல கூறுகளால் கட்டமைக்கப்படுகிறது.

அதேநேரத்தில், காடு அழிப்பு, வனவிலங்கு வேட்டை, உயிரியல் வளங்களின் சுரண்டல், முதலாளித்துவ அதிகாரம், வெளிச்சமூகத் தலையீடு ஆகியவை பளியர் மக்களின் வாழ்வில் உருவாக்கும் நெருக்கடிகளையும் நாவல் வெளிப்படுத்துகிறது. எனவே பளியர் வாழ்வியலை இயற்கையிலிருந்து பிரித்து அணுக முடியாது என்பதை நாவல் வலியுறுத்துகிறது. புலி மற்றும் யானை போன்ற வன உயிரினங்களின் நிலை, காடு அழிவின் தாக்கம், பளியர் மக்களின் உரிமை உணர்வு ஆகியவை இணைந்து நாவலின் சூழலியல் அறத்தை உருவாக்குகின்றன.

இதனால் 'கானகன்' நாவல் ஒரு பழங்குடி சமூகத்தின் வாழ்வியல் பதிவாக மட்டுமின்றி, மனிதன்–இயற்கை உறவை மறுபரிசீலனை செய்யத் தூண்டும் சமகாலத் தமிழ்ப் படைப்பாகவும் விளங்குகிறது. பளியர் இன மக்களின் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள இலக்கியப் பிரதிநிதித்துவத்தோடு கள ஆய்வு, இனவரைவியல் ஆய்வு, சூழலியல் ஆய்வு ஆகியவற்றையும் இணைத்துப் பார்ப்பது எதிர்கால ஆய்வுகளுக்கு பயனுள்ளதாக அமையும்.

துணை நூல் பட்டியல் References

சரவணக்குமார், லக்ஷ்மி. கானகன். எழுத்து பிரசுரம், 2019.

சரவணக்குமார், லக்ஷ்மி. 'இனவரைவியல் நோக்கில் லக்ஷ்மி சரவணக்குமாரின் கானகன் நாவல்'. ஆசிரியரின் அதிகாரப்பூர்வ இணையதளப் பதிவு.

வல்லமை. 'இனவரைவியல் நோக்கில் லக்ஷ்மி சரவணக்குமாரின் கானகன் நாவல்'.

.பெ. தமிழ் ஒளி

தமிழ்நாட்டுப் பழங்குடிகள் மாடவியல் நோக்கில் யாவரும் பதிப்பகம் -2024

அருண் பாலாஜி செல்வராஜ் தமிழில் கே சுப்பிரமணியன்,

பழங்குடிகளின் ஒளிவிளக்கு, எதிர் வெளியீடு 2025.